# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## 2021 ஆம் ஆண்டு யூலை மாதம் 09 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி

*(2021.07.12 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

## *நிதி*

**குறித்தசில சட்டங்களின்கீழ் வெளிப்படுத்துவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட வெளிப் படுத்தப்படாத வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகைகளையும் வருமானத்தையும் சொத்துக்களையும் தன்னிச்சையாக வெளிப்படுத்துவதற்கு ஆட்களை இயலச்செய்வதற் கும்; அவ்வாறு வெளிப்படுத்தப்பட்ட வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகைகளின்மீது, வருமானத்தின்மீது மற்றும் சொத்துக்களின்மீது வரியொன்றை விதிப்பதற்காக ஏற்பாடு செய்வதற்கும்; அத்தகைய ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகையை, வருமானத்தை அல்லது சொத்தைத் தன்னிச்சையாக வெளிப்படுத்தும் ஆட்களுக்குக் குறித்துரைக்கப்பட்ட சட்டங்களின்கீழான புலனாய்வு, குற்றவழக்கு மற்றும் தண்டங்களி லிருந்தான பொறுப்புக் கெதிராக நட்டோத்தரவாதமளிப்பதற்கும்; குறித்துரைக்கப்பட்ட சட்டங்களின்கீழ் வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகைகளையும் வருமானத்தையும் சொத்துக்களையும் ஏலவே வெளிப்படுத்தியிருந்த ஆட்களுக்குக் குறித்தசில சலுகைகளை வழங்குவதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்டவையும் அவற்றின் இடைநேர் விளைவானவையுமான கருமங்களுக்கானதுமானதொரு சட்டமூலம்**

*நிதி அமைச்சர் அவர்களால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*

---

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 45.00** **தபாற் செலவு : ரூபா 35.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

***குறித்தசில சட்டங்களின்கீழ் வெளிப்படுத்துவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட வெளிப்படுத்தப்படாத வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகைகளையும் வருமானத்தையும் சொத்துக்களையும் தன்னிச்சையாக வெளிப்படுத்துவதற்கு ஆட்களை இயலச்செய்வதற்கும்; அவ்வாறு வெளிப்படுத்தப்பட்ட வரிவிதிக்கப்படற் பாலதான வழங்குகைகளின்மீது, வருமானத்தின்மீது மற்றும் சொத்துக்களின்மீது வரியொன்றை விதிப் பதற்காக ஏற்பாடு செய்வதற்கும்; அத்தகைய ஏதேனும் வரி விதிக்கப்படற்பாலதான வழங்குகையை, வருமானத்தை அல்லது சொத்தைத் தன்னிச்சையாக வெளிப்படுத்தும் ஆட்களுக்குக் குறித்துரைக்கப்பட்ட சட்டங்களின்கீழான புலனாய்வு, குற்றவழக்கு மற்றும் தண்டங்களிலிருந்தான பொறுப்புக்கெதிராக நட்டோத்தரவாதமளிப்பதற்கும்; குறித்துரைக்கப்பட்ட சட்டங்களின்கீழ் வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகைகளையும் வருமானத்தையும் சொத்துக் களையும் ஏலவே வெளிப்படுத்தியிருந்த ஆட்களுக்குக் குறித்தசில சலுகைகளை வழங்குவதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்டவையும் அவற்றின் இடை நேர்விளைவானவையுமான கருமங்களுக்கானதுமான தொரு சட்டம்***

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-*

***1***. இச்சட்டம், 2021 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, நிதிச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். *சுருக்கப்பெயர்*

பாகம் I

***தன்னிச்சையான வெளிப்படுத்துகைமீது வரிவிதித்தல்***

***2***. (*1*) இப்பாகத்தின் ஏற்பாடுகள், (*2*) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, (இதனகத்துப்பின்னர் இப்பாகத்தில் ''வெளிப்படுத்தப்படாத வரிவிதிக்கப்படற்பாதான வழங்குகை, *இப்பாகம் ஏற்புடைய தாகின்ற ஆட்கள்*

வருமானம் அல்லது சொத்து'' எனக் குறிப்பீடுசெய்யப்படுகின்றதும்) இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் வெளிப்படுத்தப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்டதுமான வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகையின், வருமானத்தின் அல்லது சொத்தின் ஏதேனும் தொகையை 2020, மாச்சு 31 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடைந்த ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கான ஒரு சேர்பெறுமதி வரி விபரத்திரட்டில் அல்லது 2020, மாச்சு 31 ஆந் தேதியன்று அல்லது அதற்குமுன்னர் முடிவடைந்த ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்கான ஒரு வருமான விபரத்திரட்டில் வெளிப்படுத்தியிராதவரான எவரேனுமாளுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) இப்பாகத்தின் ஏற்பாடுகள் -

(அ) வெளிப்படுத்தப்படாத ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகை, வருமானம் அல்லது சொத்துத் தொடர்பாக அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் எந்த ஆள் தொடர்பாகப் புலனாய்வுகள் அல்லது சட்ட வழக்கு நடவடிக்கைகள் முடிவுறாதுள்ளனவோ அந்த எவரேனுமாளுக்கு;

(ஆ) வெளிப்படுத்தப்படாத ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகை, வருமானம் அல்லது சொத்துத் தொடர்பாக அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழான தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ள எவரேனுமாளுக்கு; அல்லது

(இ) அட்டவணை I இல் மற்றும் அட்டவணை IV இல் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் முறையான சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் எவரேனுமாளினால் வைத்திருக்கப்பட்ட வெளிப்படுத்தப்படாத எந்த வரிவிதிக்கப்படற்

பாலதான வழங்குகை, வருமானம் அல்லது சொத்துத் தொடர்பில் வரிமதிப்பீடொன்று செய்யப்பட்டுள்ளதோ வெளிப்படுத்தப்படாத அந்த வரிவிதிக்கப்படற் பாலதான வழங்குகையின், வருமானத்தின் அல்லது சொத்தின் ஏதேனும் தொகைக்கு,

ஏற்புடையனவாதலாகாது:

ஆயின், எவ்வாறாயினும், (இ) என்னும் பந்தியின் ஏற்பாடுகள், அப்பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஒரு வரிமதிப்பீட்டைச் செய்வதில் கணக்குக்கெடுக்கப்படாதிருந்துள்ள வெளிப்படுத்தப் படாத வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகையின், வருமானத்தின் அல்லது சொத்தின் ஏதேனும் தொகைக்கு ஏற்புடையனவாத லாகாது.

(3) இரண்டாம் உட்பிரிவின் (அ), (ஆ) அல்லது (இ) என்னும் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆளாகவிராதவரும் (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்டவருமான ஆளொவ்வொருவரும் இதனகத்துப்பின்னர் இப்பாகத்தில் "இப்பாகம் ஏற்புடையதாகின்ற ஆள்" எனக் குறிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

வெளிப்படுத் தப்படாத வரி வதிக்கப்படற் பாலதான வழங்குகைகள், வருமானம் அல்லது சொத்துக்கள் முதலீடு செய்யப்படுதல் அல்லது வைப்பிலிடப் படுதல் வேண்டும்

**3.** (1) இப்பாகம் ஏற்புடையதாகின்ற ஆளொருவர், (2) ஆம், (3) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, வெளிப்படுத்தப்படாத வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகைக்கு, வருமானத்துக்கு அல்லது சொத்துக்குச் சமமான தொகையொன்றை முதலீடுசெய்தல் வேண்டும் அல்லது வைப்பிலிடுதல் வேண்டும்.

(2) இப்பாகம் ஏற்புடையதாகின்ற ஆளொருவர் வெளிப்படுத்தப்படாத வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகைக்கு, வருமானத்துக்கு அல்லது சொத்துக்குச் சமமான தொகையொன்றை முதலீடுசெய்வதற்கு உட்கருதினால், அவர் —

(அ) அத்தகைய தொகையை அவர் உடனடியாக முதலீடு செய்வதற்கு இயன்றவராக இருக்குமிடத்து -

(i) ஒரு வதிவுள்ள கம்பெனியினால் வழங்கப்பட்ட பங்குகளை;

(ii) இலங்கை அரசாங்கத்தின் சார்பில் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களை அல்லது திறைசேரி முறிகளை;

(iii) இலங்கையில் வதிவுள்ளவொரு கம்பெனியினால் வழங்கப்பட்ட எவையேனும் விலைகூறப்பட்ட தனிசுப் பிணைப்பொறுப்புக்களை; அல்லது

(iv) இலங்கையிலுள்ள ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை,

இச்சட்டம் தொடங்கும் தேதியன்று அல்லது அதற்குப்பின்னர் ஆனால் 2021, திசெம்பர் 31 ஆந் தேதிக்கு முன்னர் கொள்வனவு செய்தல் வேண்டும்.

(ஆ) இலங்கை ரூபாய்களிலாயினுஞ்சரி அல்லது வெளிநாட்டு நாணயத்திலாயினுஞ்சரி காசாகக் கிடைக்கக்கூடியதான அத்தகைய தொகையை அவர் உடனடியாக முதலீடு செய்வதற்கு இயலாதவராக இருக்குமிடத்து, அவர் அத்தகைய தொகையை இச்சட்டம் தொடங்கும் தேதியன்று அல்லது அதற்குப்பின்னர் ஆனால் 2021, திசெம்பர் 31 ஆந்தேதிக்கு முன்னர் ஒரு வங்கிக் கணக்கில் வைப்பிலிடுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், இச்சட்டம் தொடங்கும் தேதிக்குமுன்னர் பின்வருவனவற்றைச் செய்துள்ளவரான இப்பாகம் ஏற்புடையதாகின்ற ஆளொருவருக்கு ஏற்புடையனவாதலாகாது–

(அ) பின்வருவனவற்றைக் கொள்வனவுசெய்வதற்கு வெளிப்படுத்தப்படாத வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகைக்கு, வருமானத்துக்கு அல்லது சொத்துக்குச் சமமான தொகையொன்றைப் பயன்படுத்தியுள்ளவர்:–

(i) ஒரு வதிவுள்ள கம்பெனியினால் வழங்கப்பட்ட பங்குகள்;

(ii) இலங்கை அரசாங்கத்தின் சார்பில் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்கள் அல்லது திறைசேரி முறிகள்;

(iii) இலங்கையில் வதிவுள்ளவொரு கம்பெனியினால் வழங்கப்பட்ட எவையேனும் விலைகூறப்பட்ட தனிசுப் பிணைப்பொறுப்புக்கள்; அல்லது

(iv) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம்; அல்லது

(ஆ) வெளிப்படுத்தப்படாத வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகைக்கு, வருமானத்துக்கு அல்லது சொத்துக்குச் சமமான தொகையொன்றை ஒரு வங்கிக் கணக்கில் வைப்பிலிட்டுள்ளவர்.

தன்னிச்சையான வெளிப் படுத்துகையின் மீதான வரி

**4.** (1) இப்பாகம் ஏற்புடையதாகின்ற ஆளொருவர், (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய 5 ஆம் பிரிவின் கீழான வெளிப்படுத்துகையைச் செய்யுமுன்னர் ''தன்னிச்சையான வெளிப்படுத்துகைமீதான வரி' எனவழைக்கப்படவேண்டிய வரியொன்றைச் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்.

(2) இப்பாகம் ஏற்புடையதாகின்ற ஆளொருவர் –

(அ) 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட வெளிப்படுத்துகையில் அசைவற்ற அல்லது அசைவுள்ள ஆதனம் அல்லாத வெளிப்படுத்தப்படாத ஏதேனும் வரி விதிக்கப்படற்பாலதான வழங்குகையை, வருமானத்தை அல்லது சொத்தை வெளிப்படுத்துவதற்கு உட்கருதுமிடத்து, அவர் 3 ஆம் பிரிவின்கீழ் முதலீடு செய்யப்பட்ட அல்லது வைப்பிலிடப்பட்ட அத்தகைய தொகையின் அல்லது வருமானத்தின் அல்லது அத்தகைய சொத்தின் ஆகுசெலவின்மீது ஒருசதவீதத்தில் தன்னிச்சையான வெளிப்படுத்துகைமீதான வரியைச் செலுத்துவதற்கு ஆளாகவுள்ளார்; அல்லது

(ஆ) 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட வெளிப்படுத்துகையில் ஏதேனும் அசைவற்ற அல்லது அசைவுள்ள ஆதனத்தை வெளிப்படுத்துவதற்கு உட்கருதுமிடத்து, வெளிப்படுத்துகைத் தேதியன்று அத்தகைய ஆதனத்தின் சந்தைப் பெறுமதியின்மீது ஒருசதவீதத்தில் தன்னிச்சையான வெளிப்படுத்துகை மீதான வரியைச் செலுத்துவதற்கு ஆளாகவுள்ளார்.

(3) இப்பாகம் ஏற்புடையதாகின்ற ஆளொருவரினால் செலுத்தப்பட்ட தன்னிச்சையான வெளிப்படுத்துகைமீதான வரியின் ஏதேனும் தொகை, 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கருத்துக்குட்பட ஒரு வரிவரவாக அல்லது ஒரு செலவினமாகக் கருதப்படுதலாகாது அத்துடன் மீளளிக்கப்படத்தக்கதாக இருத்தலாகாது.

வெளிப்படுத்தப்படாத வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகையின், வருமானத்தின் அல்லது சொத்தின் வெளிப்படுத்துகை

**5.** (1) மூன்றாம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்டவாறு வெளிப்படுத்தப்படாத ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகையை, வருமானத்தை அல்லது சொத்தை முதலீடுசெய்துள்ளவரும் அல்லது வைப்பிலிட்டுள்ளவரும் 4 ஆம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்டவாறு தன்னிச்சையான வெளிப்படுத்துகைமீதான வரியைச் செலுத்தியுள்ளவரும் இப்பாகம் ஏற்புடையதாகின்றவரும் (இதனகத்துப்பின்னர் இப்பாகத்தில் "வெளிப்படுத்துநர்" எனக் குறிப்பீடுசெய்யப்படுகின்றவருமான) எவரேனுமாள், 2021, திசெம்பர் 31 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர், (2) ஆம் உட்பிரிவின் கீழ் ஆணையாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட வழிகாட்டுநெறிகளுக்கமைய, பொருளளவில் இதற்கான அட்டவணை V இன் பாகம் I இல் அல்லது பாகம் II இல் குறித்துரைக்கப்பட்ட இயைபான படிவத்தில், வெளிப்படுத்தப்படாத ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகை, வருமானம் அல்லது சொத்துத் தொடர்பான வெளிப்படுத்துகையொன்றை ஆணையாளர் தலைமையதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) ஆணையாளர் தலைமையதிபதி பின்வருவனவற்றைக் குறித்துரைக்கின்ற வழிகாட்டுநெறிகளை வழங்கலாம்:-

(அ) வெளிப்படுத்துநர் 3 ஆம், 4 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகியுள்ளாரென எண்பிப்பதற்கென வெளிப்படுத்துகையுடன் கோப்பிடப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட இணைப்புக்கள், எவையேனுமிருப்பின், அவை; அத்துடன்

(ஆ) வெளிப்படுத்துகையைக் கோப்பிடுகின்ற முறை.

(3) ஆணையாளர் தலைமையதிபதி (1) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட வெளிப்படுத்துகைபற்றித் திருப்திப்படுவதன்மேல், அத்தகைய வெளிப்படுத்துகை பெறப்பட்டதிலிருந்து முப்பது நாட்களினுள் அத்தகைய வெளிப்படுத்துகையை எழுத்தில் ஒப்புக்கொள்ளுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஒப்புக்கொள்ளுகையானது (1) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஒரு வெளிப்படுத்துகை ஆணையாளர் தலைமையதிபதியினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கான எண்பிப்பாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(4) (அ) ஓராம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட வெளிப்படுத்துகையொன்று இப்பாகத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகாதிருப்பின், அத்தகைய வெளிப்படுத்துகையை ஆணையாளர் தலைமையதிபதி நிராகரிக்கலாம்.

(ஆ) அத்தகைய நிராகரிப்பு வெளிப்படுத்துநருக்கு எழுத்தில் உடனடியாக அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(5) ஓராம் உட்பிரிவின்கீழான வெளிப்படுத்துகையில் பொய்யான அல்லது பிழையான தகவல்களை வேண்டுமென்று வழங்குகின்ற எவரேனும் வெளிப்படுத்துநர், அத்தகைய வெளிப்படுத்துகை (3) ஆம் உட்பிரிவின்கீழ் ஆணையாளர் தலைமையதிபதியினால் ஒப்புக்கொள்ளப்பட்டமை எவ்வாறிருப்பினும், 6 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட விடுபாட்டுரிமைக்கு உரித்துடையவராதலாகாது.

வெளிப்படுத்துநர்களுக்கு வழங்கப்பட்ட விடுபாட்டுரிமை

**6.** (1) ஐந்தாம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் ஆணையாளர் தலைமையதிபதியினால் எந்த வெளிப்படுத்துநரின் வெளிப்படுத்துகை ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளதோ மற்றும் 4 ஆம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்டவாறு தன்னிச்சையான வெளிப்படுத்துகைமீதான வரியை அவர் செலுத்தியுள்ளாரோ அந்த வெளிப்படுத்துநர்-

(அ) 2020, மாச்சு 31 ஆந்தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடைகின்ற ஏதேனும் காலப்பகுதி தொடர்பாகவும் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட வெளிப்படுத்துகையில் வெளிப்படுத்தப் பட்ட வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகை, வருமானம் அல்லது சொத்துத் தொடர்பாகவும் இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட முறையான சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழான;

(ஆ) அத்தகைய வரி அத்தகைய வெளிப்படுத்துநரினால் சேகரிக்கப்பட்டிருந்தாலொழிய, 2020, மாச்சு 31 ஆந் தேதியன்று அல்லது அதற்குமுன்னர் முடிவடை கின்ற ஏதேனும் காலப்பகுதி தொடர்பாகவும் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட வெளிப்படுத்துகையில் வெளிப்படுத்தப்பட்ட வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகைகளின் தொகை தொடர்பாகவும் 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழான,

ஏதேனும் வரியை, தண்டத்தை அல்லது வட்டியைச் செலுத்து வதற்கான பொறுப்பிலிருந்து அல்லது ஏதேனும் புலனாய்விலிருந்து அல்லது குற்றவழக்கிலிருந்து முழு விடுபாட்டுரிமையையும் துய்ப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(2) ஐந்தாம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, ஆணையாளர் தலைமையதிபதி மேலே குறித்துரைக்கப்பட்டவாறான

முழு விடுபாட்டுரிமையும் (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட எவரேனும் வெளிப்படுத்துநருக்கு வழங்கப்படுவதனை உறுதிப் படுத்துதல் வேண்டும்.

இரகசியத்தைப் பேணுதல்

**7**. (1) ஆணையாளர் தலைமையதிபதி அல்லது உண்ணாட்டர சிறைத் திணைக்களத்தின் எவரேனும் அலுவலர், ஒரு வெளிப் படுத்துநரின் ஆளடையாளம் மற்றும் இச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஒரு வெளிப்படுத்துகையில் அடங்கியுள்ள ஏதேனும் கருமம் அல்லது விடயம் தொடர்பில் முழுமையாக இரகசியத்தைப் பேணிக்காத்தலும் பேணிக்காத்தலில் உதவுதலும் வேண்டும்.

(2) அலுவலகமுறையான இரகசியத்தைப் பேணுதலுக்கு ஏற்புடையனவான 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் எல்லா ஏற்பாடுகளும், அத்தகைய சட்டத்தின் 100 ஆம் பிரிவின்கீழ் அத்தகைய இரகசியம் பேணலை மீறுவதற்கான தண்டனையுட்பட, இச்சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட வெளிப்படுத்துகையொன்றுக்கு ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையன வாதல் வேண்டும்.

இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுவதன் விளைவு

**8**. இப்பாகம் ஏற்புடையதாகின்ற எவரேனுமாள் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து, இதற்கான அட்டவணை I இல் அல்லது அட்டவணை IV இல் குறித்துரைக்கப்பட்ட முறையான சட்டத்தின் ஏற்பாடுகளினது நியதிகளின் படி அவருக்கெதிராக நடவடிக்கையெடுக்கப்படுவதற்கு அவர் ஆளாதல் வேண்டும்.

ஐயத்தைத் தவிர்த்தல்

**9**. ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, 2004 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (மன்னிப்பை ஒழுங்குபடுத்துதல்) சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் செய்யப்பட்ட எதுவும் அல்லது வழங்கப்பட்ட ஏதேனும் மன்னிப்பு எவ்வாறிருப்பினும், இப்பாகத்தின் ஏற்பாடுகள் இப்பாகம் ஏற்புடையதாகின்ற எவரேனுமாளுக்கு ஏற்புடையனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.

பாகம் II

## குறித்தசில சட்டங்களின்கீழ் வரி நிலுவைகளைப் பதிவழிப்பதற்கான ஏற்பாடுகள்

**10**. இப்பாகத்தின் ஏற்பாடுகள், 2020, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்காக அல்லது 2020, திசெம்பர் 31 ஆந் தேதிக்குமுன்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலப்பகுதிக்காக, அட்டவணை I, அட்டவணை III அல்லது அட்டவணை IV இல் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் எவையேனும் வரி நிலுவைகளைச் செலுத்துவதற்கு ஆளாகவுள்ளவரும் அல்லது அத்தகைய ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் விதிக்கப்பட்ட ஏதேனும் தண்டத்தை செலுத்துவதற்கு ஆளாகவுள்ளவரும், (இதனகத்துப்பின்னர் இப்பாகத்தில் "வரிசெலுத்துநர்"எனக் குறிப்பீடுசெய்யப்படுப வருமான) எவரேனுமாளுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

இப்பாகம் ஏற்புடைய தாகின்ற ஆட்கள்

**11**. இதற்கான அட்டவணை III இல் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் சட்டத்தில் அல்லது ஏதேனும் சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டில் அல்லது 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதிவரிச் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், ஆணையாளர் தலைமையதிபதி, 14 ஆம், 15 ஆம் பிரிவுகளுக்கமைய, ஒரு வரிசெலுத்துநர் தொடர்பாக 2020, திசெம்பர் 31 ஆந்தேதியன்று அல்லது அதற்குமுன்னர் முடிவடைகின்ற ஏதேனும் காலப்பகுதி தொடர்பில் இதற்கான அட்டவணை III இன் பாகம் அ விலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் அல்லது இதற்கான அட்டவணை III இன் பாகம் ஆ வில் குறித்துரைக்கப்பட்ட 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதிவரிச் சட்டத்தின் குறிப்பிட்ட ஏற்பாடுகளின்கீழ் எவையேனும் வரி நிலுவைகளை பதிவழித்தல் வேண்டும்.

குறித்தசில வரிகள் தொடர்பில் வரி நிலுவைகள் பதி வழிக்கப்படுதல் வேண்டும்

**12**. இரண்டாயிரத்து இருபதாமாண்டு மாச்சு 31 ஆந் தேதியன்று முடிவடைகின்ற வரிமதிப்பீட்டாண்டுக்கானதும் 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி கணக்கிடப்பட்டதுமான எந்தத் தனியாளின் வரிமதிப்பிடற்பாலதான வருமானம் மூன்று மில்லியன்

குறித்தசில தனியாட்கள் தொடர்பில் வரிநிலுவைகள் பதிவழிக்கப் படுதல் வேண்டும்

ரூபாவை விஞ்சாதுள்ளதோ 2020, திசெம்பர் 31 ஆந் தேதியன்றுள்ளவாறு 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதிவரிச் சட்டமல்லாத அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அந்த எவரேனும் தனியாளினால் செலுத்தப்படற்பாலனவான எவையேனும் வரி நிலுவைகளை ஆணையாளர் தலைமையதிபதி, 14 ஆம், 15 ஆம் பிரிவுகளுக்கமைய, பதிவழித்தல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், இப்பிரிவின் ஏற்பாடுகள், பின்வரும் சூழ்நிலைகளின் கீழ் அத்தகைய எவரேனும் தனியாளுக்கு ஏற்புடையனவாதலாகாது:-

(அ) இரண்டாயிரத்துப் பதினேழாமாண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி, கழிக்கப்படாத நட்டமொன்றுட்பட்ட ஏதேனும் நட்டத்தைக் கழிக்காமல் இயைபான தனியாளின் வரிமதிப்பிடற்பாலதான வருமானம் மூன்று மில்லியன் ரூபாவை விஞ்சுமிடத்து;

(ஆ) இரண்டாயிரத்துப் பதினேழாமாண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி ஈட்டுகைகளும் இலாபங்களும் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டனவாக இயைபான தனியாளின் வரிமதிப்பிடற்பாலதான வருமானம் கூட்டுமொத்தத்தில் மூன்று மில்லியன் ரூபாவை விஞ்சுமிடத்து;

(இ) இயைபான தனியாள் எந்தத் தொழிலின் அல்லது பங்காண்மையின் பங்காளரொருவராக உள்ளாரோ 2020, மாச்சு 31 ஆந் தேதியன்று முடிவடைகின்ற வரிமதிப்பீட்டாண்டுக்காக அந்தத் தொழிலின் அல்லது பங்காண்மையின் வருடாந்த முழுமொத்த மொத்த விற்பனவுவரவு ஐந்நூறு மில்லியன் ரூபாவுக்குக் குறைவாகவிராதவிடத்து; அல்லது

(ஈ) இயைபான தனியாளின் வரிமதிப்பிடற்பாலதான வருமானம் வெறுமனே வேறொரு தொழிலின் இடைநேர்விளைவானதாகவுள்ள அத்தகைய வருமானம் புறநீங்கலாகப் பந்தயம்பிடித்தல் மற்றும் சூதாடுதல் தொழிலொன்றை அல்லது ஏதேனும் மதுபானத் தொழிலை நடாத்துவதிலிருந்து ஈட்டப்பட்ட ஒரு வருமானத்தை உள்ளடக்குமிடத்து.

தவணைதவறிய வரிமீதான தண்டம் பதி வழிக்கப்படுதல் வேண்டும்

**13.** (1) ஆணையாளர் தலைமையதிபதி, ஒரு வரிசெலுத்துநர் தொடர்பாக, இதற்கான அட்டவணை I இல் அல்லது அட்டவணை IV இல் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி கணக்கிடப்பட்ட எந்தத் தண்டம் அல்லது வட்டி தொடர்பிலான கொடுப்பனவு வருமதியாகவிருந்த தேதி 2020, திசெம்பர் 31 ஆந் தேதியாக அல்லது அத்தேதிக்குமுன்னரான ஒருதேதியாக இருந்ததோ அந்த ஏதேனும் தண்டத்தை அல்லது வட்டியை, வரிசெலுத்துநர், 2022, மாச்சு 31 ஆந் தேதியன்று அல்லது அதற்குமுன்னர், சொல்லப்பட்ட சட்டங்களின் ஏற்பாடு களின்கீழ் நிலுவையாகவுள்ள வரியின் முழுத்தொகையையும் கொடுத்துத் தீர்த்திருத்தல், பதிவழித்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவிலுள்ளதெதுவும், 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி அல்லது இச்சட்டத்தின் 11 ஆம் அல்லது 12 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி பதிவழிக்கப்பட்ட எவையேனும் வரி நிலுவைகள் தொடர்பில், அவற்றின்மீதான ஏதேனும் வரியை, வட்டியை அல்லது தண்டத்தைச் செலுத்துவதற்கு வரிசெலுத்துநர்மீது பொறுப்பொன்றைச் சுமத்துவதாக வாசித்துப் பொருள் கொள்ளப்படுதலாகாது.

பிணக்கிலுள்ள வரி நிலுவைகள் பதிவழிக்கப் படலாகாது

**14.** ஒரு வரிசெலுத்துநர் தொடர்பாகச் செய்யப்பட்ட வரிமதிப் பீட்டின்மீது, இதற்கான அட்டவணை I இல் அல்லது அட்டவணை III இல் குறித்துரைக்கப்பட்ட முறையான ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் 2021, பெப்புருவரி 22 ஆந் தேதிக்குமுன்னர் வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவின் முன்னர் அல்லது

ஏதேனும் சட்ட நீதிமன்றத்தின்முன்னர் முடிபு செய்யப்படவுள்ளதும் 11 ஆம் அல்லது 12 ஆம் பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட எவையேனும் வரி நிலுவைகள் தொடர்பானதுமான ஏதேனும் பிணக்கு உள்ளவிடத்து, அத்தகைய வரி நிலுவைகள், விடயத்துக்கேற்ப, 11 ஆம் அல்லது 12 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் பதிவழிக்கப்படுதலாகாது.

வரி மீளளிப்புகள், பதிவழிக்கப்பட்ட வரி நிலுவைகளுக்கெதிராக எதிரீடு செய்யப்படுதல் வேண்டும்

**15**. இரண்டாயிரத்து இருபதாமாண்டு திசெம்பர் 31 ஆந் தேதிக்கு முன்னர் முடிவடைகின்ற ஏதேனும் காலப்பகுதிக்காக, இதற்கான அட்டவணை I இல், அட்டவணை III இல் அல்லது அட்டவணை IV இல் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் ஒரு வரிசெலுத்துநரினால் உரியமுறையில் உரிமைகோரப்பட்டதும் இச்சட்டம் தொடங்கும் தேதியன்று கொடுப்பனவு செய்யப்படவுள்ளதுமான ஏதேனும் வரி மீளளிப்பு, 11 ஆம் அல்லது 12 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் பதிவழிக்கப்பட்ட எவையேனும் வரி நிலுவைகளுக்கெதிராக எதிரீடு செய்யப்படுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், இப்பிரிவின் ஏற்பாடுகள், மீளளிப்பு எந்தக் காலப்பகுதியில் வருமதியாகவுள்ளதோ அந்தக் காலப்பகுதிக்கு அடுத்துப்பின்னரானவொரு காலப்பகுதியில் சட்டத்தினால் விதிக்கப்பட்ட ஏதேனும் தண்டத்துக்கு ஏற்புடைமை எதனையும் கொண்டிருத்தலாகாது.

வரி நிலுவைகளுக்கெதிராக எதிரீடு செய்யப்பட்ட தொகைகளை ஆணையாளர் தலைமையதிபதி அறிவித்தல் வேண்டும்

**16**. (1) ஆணையாளர் தலைமையதிபதி, ஒவ்வொரு வரி செலுத்துநருக்கும், 15 ஆம் பிரிவின் நியதிகளின்படி வரி நிலுவைகளுக்கெதிராக எதிரீடு செய்யப்படவேண்டிய மீளளிப்புத் தொகையை எழுத்தில் அறிவித்தல் வேண்டும்.

(2) அத்தகைய ஆள் அவ்வாறு பதிவழிக்கப்பட்ட வரி நிலுவைகளுக்கெதிராக எதிரீடுசெய்யப்படவேண்டிய மீளளிப்புத் தொகைகள் பற்றித் திருப்திப்படாதிருப்பின், அவர், ஆணையாளர் தலைமையதிபதியின் தொடர்பாடல் தேதியிலிருந்து பதினான்கு நாட்காலப்பகுதியினுள், ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்பட்டவாறு வரி நிலுவைகளுக்கெதிராக மீளளிப்புகளை எதிரீடுசெய்யவேண்டாமென ஆணையாளர் தலைமையதிபதிக்கு எழுத்திலான கோரிக்கையொன்றைச் செய்தல் வேண்டுமென்பதுடன் 2022, மாச்சு 31 ஆந் தேதியன்று அல்லது அதற்குமுன்னர் வரி நிலுவைகளின் முழுத்தொகையையும் கொடுத்துத்தீர்த்தலும் வேண்டும்.

(3) (அ) ஆணையாளர் தலைமையதிபதி, (2) ஆம் உட்பிரிவின்கீழ் வரிசெலுத்துநரினால் செய்யப்பட்டவொரு கோரிக்கையின்மேல், (2) ஆம் உட்பிரிவின்கீழான கோரிக்கையுடன் சேர்த்துச் சமர்ப்பிக் கப்பட்ட பொருத்தமான கொடுப்பனவுத் திட்டமொன்றுக்கிணங்க 2022, மாச்சு 31 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட வரி நிலுவைகளைக் கொடுத்துத்தீர்ப்பதற்கு அத்தகைய வரிசெலுத்துநருக்கு அங்கீகாரம் வழங்கலாம்.

(ஆ) அத்தகைய கொடுப்பனவுத் திட்டத்தில் ஆணையாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட தேதிகளில் அல்லது அவற்றுக்குமுன்னர் பந்தி (அ) வின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுத் திட்டத்துக்கு இணங்கியொழுக வரிசெலுத்துநர் செயலாற்றினால், ஆணையாளர் தலைமையதிபதி அத்தகைய வரி நிலுவைகள்மீதான ஏதேனும் வட்டியை அல்லது தண்டத்தைப் பதிவழித்தல் வேண்டும்.

(4) வரிசெலுத்துநர் (2) ஆம் உட்பிரிவின்கீழ் கோரிக்கை யொன்றைச் செய்யாதவிடத்து அல்லது ஆணையாளர் தலைமை யதிபதியினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொடுப்பனவுத் திட்டத்துக் கிணங்க வரி நிலுவைகளைக் கொடுத்துத்தீர்க்காதவிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி (1) ஆம் உட்பிரிவின்கீழான அவரது தொடர்பாடலில் குறித்துரைக்கப்பட்டவாறு வரி நிலுவைகளுக் கெதிராக மீளளிப்புகளை எதிரீடுசெய்வதற்கு முற்படுதல் வேண்டும்.

குறித்தசில சட்டங்களின்கீழ் வரிமதிப்பீடுகள் வழங்கப் படுதலாகாது

**17**. இரண்டாயிரத்து இருபத்தோராம் ஆண்டு சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப்பின்னர், முறையான சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ், ஒரு வரிசெலுத்துநர் தொடர்பாக, 2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச் சட்டத்தின் அல்லது 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழான ஏதேனும் வரிமதிப்பீடு வழங்கப்படுதலாகாது.

**18**. ஆணையாளர் தலைமையதிபதி, பிரிவுகள் 11, 12 மற்றும் 13 இன் ஏற்பாடுகளின்கீழ் பதிவழிக்கப்பட்ட வரி நிலுவைகளும் தண்டங்களும் தொடர்பாகத் தகுந்த பதிவேடுகளைப் பேணுதல் வேண்டும்.

தகுந்த பதிவேடுகள் பேணப்படுதல் வேண்டும்

**19**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**20**. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்தினாலொழிய-

பொருள்கோடல்

"சொத்து" என்பது, வங்கி மீதிகள், நிதிசார் சாதனங்கள், பங்குகள், பெறுதிகள், திறைசேரி உண்டியல்கள், நிலையான வைப்புக்கள், கால வைப்புக்கள், முறிகள் அல்லது வேறு வகையினவான வைப்புக்கள், பிணைப்பொறுப்புக்கள் அல்லது கடன்கள் என்றவகையாகக் கொடுக்கப்பட்ட பணம், கையிலுள்ள காசு, இரத்தினக்கல் அல்லது தங்கம், வேறேதேனும் பணவகையான உரிமை என்பனவுட்பட, ஆனால் ஏதேனும் அருவச்சொத்து வரி செலுத்துநரினால் வேறெவரேனும் ஆளிடமிருந்து கொள்வனவு செய்யப் பட்டிருந்தாலொழிய, ஏதேனும் அருவச் சொத்து நீங்கலாகப் பணம் அல்லது ஏதேனும் அசைவற்ற அல்லது அசைவுள்ள ஆதனம் என்று பொருளாகும்;

"வங்கிக் கணக்கு" என்பது, 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தின் உரிமமளிக்கப்பட்டவொரு வங்கியில் ஒரு வெளிப்படுத்துநரினால் திறக்கப்பட்டுப் பேணப்பட்ட ஏதேனும் வங்கிக் கணக்கு என்று பொருளாகும்;

"ஆணையாளர் தலைமையதிபதி" என்பது, 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்திலுள்ள வாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

''மத்திய வங்கி'' என்பது, (422 ஆம் அத்தியாயமான) பணச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கி என்று பொருளாகும்;

''அசைவற்ற ஆதனம்'' என்பது, நிர்மாணிக்கப்பட்டதாயினுஞ் சரி அல்லது நிர்மாணிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றதாயினுஞ்சரி இலங்கையில் அல்லது வெளிநாட்டில் உள்ள ஏதேனும் கட்டிடம் என்று பொருளாகும்;

''வருமானம்'' என்பது, இலங்கையிலாயினுஞ்சரி அல்லது வெளிநாட்டிலாயினுஞ்சரி ஏதேனும் மூலத்திலிருந்து பெறப்பட்ட ஏதேனும் ஈட்டுகை, இலாபம் அல்லது பெறுகை என்று பொருளாகும்;

''நட்டம்'' என்பது, 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின்கீழ் அத்தகைய சொல்லமைப்புக்குக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

''பணம்'' என்பது, இலங்கையில் அல்லது வெளிநாட்டில் வைத்திருக்கப்பட்டதாயினுஞ்சரி உள்நாட்டு நாணயத்தையும் வெளிநாட்டு நாணயத்தையும் உள்ளடக்கும்;

''அசைவுள்ள ஆதனம்'' என்பது, தங்கமுட்பட இலங்கையில் அல்லது வெளிநாட்டில் உள்ள எல்லா வகையினதுமான அசைவுள்ள ஆதனத்தையும் உள்ளடக்கும் ஆனால் பணத்தை உள்ளடக்காது;

''ஆள்'' என்பது, 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் அத்தகைய சொல்லமைப்புக்குக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

''விபரத்திரட்டு'' என்பது, விபரத்திரட்டுடன் கொடுத்துதவப் படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் சான்றிதழ், வெளிப்படுத்துகை அல்லது வேறேதேனும் இணைப்பு

உட்பட, அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட முறையான சட்டத்தின் நியதிகளின்படி உண்ணாட்டரசிறைத் திணைக்களத்திடம் கோப்பிடுவதற்கு ஆளொருவர் தேவைப்படுத்தப்பட்ட வருமானம் பற்றியவொரு விபரத் திரட்டு என்று பொருளாகும்;

"வதிவுள்ள கம்பெனி" என்பது, 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 69 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கருத்துக்குட்பட்டவொரு கம்பெனி என்று பொருளாகும்;

பாகம் II இல் "வரி" என்பது, அட்டவணை I இல், III இல் அல்லது IV இல் குறித்துரைக்கப்பட்ட முறையான சட்டத்தின்கீழ் செலுத்தப்படற்பாலதான அல்லது அறவிடப்பட்ட ஏதேனும் வரி, மிகைக்கட்டணம், அறவீடு, விதிப்பனவு அல்லது உதவுதொகை என்பவற்றை உள்ளடக்குதல் வேண்டும்;

"வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகை" என்பது, 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதிவரிச் சட்டத்தின் 83 ஆம் பிரிவின்கீழ் அத்தகைய சொல்லமைப்புக்குக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"வரி நிலுவைகள்" என்பது, முறையான சட்டத்திற்கு இணங்கியொழுக, கொடுப்பனவு வருமதியாகவுள்ள தேதிக்குப்பின்னர் செலுத்தப்படாதிருக்கும் ஒரு வரி என்று பொருளாகுமென்பதுடன் ஆணையாளர் தலைமையதிபதியின் பதிவேடுகளுக்கிணங்கச் செலுத்தப்படாதிருக்கும், அத்தகைய ஏதேனும் சட்டத்தின்கீழ் தவணைதவறிய ஒரு வரியையும் அல்லது வேறு தண்டத்தையும் மற்றும் பிடித்துவைத்தல் வரியையும் அல்லது தொழில் தருநரொருவரினால் தொழில் வருமானத்தின்மீது கழிக்கப்பட்ட ஒரு வரியையும் உள்ளடக்கும்;

"வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு" என்பது, 2011 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு என்று பொருளாகும்;

"கழிக்கப்படாத நட்டம்" என்பது, 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ் அத்தகைய சொல்லமைப்புக்குக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"வரிமதிப்பீட்டாண்டு" என்பது, 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின்கீழ் அத்தகைய சொல்லமைப்புக்குக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

## அட்டவணை I

(பிரிவுகள் 2,6,8,10,12,13,14, மற்றும் 15)

1. 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம்
2. 2000 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம்
3. 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம்
4. 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம்
5. 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டம்.

## அட்டவணை II

(பிரிவு 2)

1. 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பணம் தூய்தாக்கல் தடைச் சட்டம்
2. 2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல்மீதான சமவாயச் சட்டம்

3. (26 ஆம் அத்தியாயமான) இலஞ்சச் சட்டம்

4. 2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, போதையூட்டும் அவுடதங்களினதும் உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தங்களினதும் சட்டமுரணான வியாபாரத்திற்கெதிரான சமவாயங்கள் சட்டம்

## அட்டவணை III

(பிரிவுகள் 10,11,14, மற்றும் 15)

பாகம் அ

1. 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் விதிக்கப்பட்ட செல்வ வரியும் கொடை வரியும்

2. 1981 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க, மொத்தவிற்பனவு வரவுவரிச் சட்டம்

3. 1982 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, செல்வவரிமீதான மிகைக்கட்டணச் சட்டம்

4. 1989 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, செல்வவரிமீதான மிகைக்கட்டணச் சட்டம்

5. 1982 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, வருமானவரிமீதான மிகைக்கட்டணச் சட்டம்

6. 1984 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வருமானவரிமீதான மிகைக்கட்டணச் சட்டம்

7. 1989 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, வருமானவரிமீதான மிகைக்கட்டணச் சட்டம்

8. 1991 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, தேசிய பாதுகாப்பு அறவீட்டுச் சட்டம்

9. 1996 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நாட்டைப் பாதுகாத்தல் உதவுதொகைச் சட்டம்

10. 1996 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, பண்டங்கள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம்

11. 2001 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, வருமானவரிமீதான மிகைக்கட்டணச் சட்டம்

12. 2002 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பற்றுக்கள் வரிச் சட்டம்

13. 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின்கீழ் விதிக்கப்பட்ட சமூகப் பொறுப்பு அறவீடு

14. 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவுச் சட்டம்

15. 2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச் சட்டம்

16. 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின்கீழ் விதிக்கப்பட்ட பொருளாதாரச் சேவை விதிப்பனவு

பாகம் ஆ

1. 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் 25ஏ என்னும் பிரிவின்கீழ் விதிக்கப்பட்ட சேர்பெறுமதிவரி

2. 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் 26அ என்னும் பிரிவின்கீழ் கழிக்கப்பட்ட விருப்புச் சேர்பெறுமதிவரி முற்கொடுப்பனவு

## அட்டவணை IV

(பிரிவுகள் 2,8,10,13 மற்றும் 15)

1. 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, பந்தயம்பிடித்தல் மற்றும் சூதாடுதல் அறவீட்டுச் சட்டம்

2. 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டம்

3. 1982 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, முத்திரைத்தீர்வைச் சட்டம்

4. 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைத்தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

**அட்டவணை V**

(பிரிவு 5)

பாகம் I

**தன்னிச்சையான வெளிப்படுத்துகைமீதான வரி**

2021 ஆம் ஆண்டின் ....... ஆம் இலக்க, நிதிச் சட்டம்

**5 ஆம் பிரிவின்கீழான வெளிப்படுத்துகை**

தனியாளொருவரினால் கொடுத்துதவப்படுதல் வேண்டும்

தேசிய அடையாள அட்டை இல. ........................
கடவுச்சீட்டு இல. ........................

1. .....................................என்னுமிடத்தைச் சேர்ந்தவரும் (முகவரி) ........................ ஆம் இலக்கத் தேசிய அடையாள அட்டையை ........................ ஆம் இலக்கக் கடவுச்சீட்டை வைத்திருப்பவருமான வண./திரு./திருமதி./செல்வி/........................ (முழுப்பெயர்) ஆகிய நான், 2021 ஆம் ஆண்டின் ........................ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் I இன் நியதிகளின்படி வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகை, வருமானம் அல்லது சொத்துத் தொடர்பிலான வெளிப்படுத்துகையொன்றைச் செய்கின்றேன்.

2. இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் 2020, மாச்சு 31 ஆந் தேதியன்றுள்ளவாறாக என்னால் வைத்திருக்கப்பட்ட பின்வரும் சொத்துக்களை இத்தால் வெளிப்படுத்துகின்றேன்:-

| தொடர் இல. | வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகையின், வருமானத்தின் அல்லது சொத்தின் வகை | வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகை, வருமானம் அல்லது சொத்து வைத்திருக்கப்பட்ட இடம்/ உருவகம்/ முதலீடு செய்யப்பட்ட வங்கி | அளவு/ கணக்கு இல. | தொகை/ சந்தைப் பெறுமதி |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | மொத்தத் தொகை / சந்தைப் பெறுமதி | | | |

3. மேலே வெளிப்படுத்தப்பட்டவாறான பணம் பின்வருமாறாகவுள்ளது -

(i) பின்வருவனவற்றின்மீது முதலீடு செய்யப்பட்டவை -

(அ) .............................. அன்று (தேதி) .............................. ரூபாத் தொகையினவான ........................ இன் (கம்பெனியின் பெயர்) ........................ (அளவு) பங்குகள் / தனிசுப் பிணைப்பொறுப்புக்கள்மீது.

(ஆ) ........................ அன்று (தேதி) ........................ இலங்கை ரூபாக்களில் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்கள் / திறைசேரி முறிகள்மீது.

(இ) ........................ அன்று (தேதி) ........................ இலங்கை ரூபாக்களில் இலங்கையிலுள்ள ........................ மீது (காணி, கட்டிடம், மோட்டார் வாகனம், தங்கம் முதலியன போன்ற அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் - குறித்துரைக்கவும்).

(ii) ........................ அன்று (தேதி) ........................ வங்கியின் ........................ கிளையில் ........................ ஆம் இலக்கத்தைக் கொண்ட எனது ........................ கணக்கில் வைப்பிலிடப்பட்டவை.

4. உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதியின் கணக்குக்கு ........................ ஆம் இலக்கக் குறிப்பீட்டிலக்கத்தின்கீழ்........................ அன்று (கொடுப்பனவுத்தேதி) ........................ ரூபாத் தொகையை 4 ஆம் பிரிவின் நியதிகளின்படி 1% வீதத்தில், 2 ஆம் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட கூட்டுமொத்தத் தொகைமீதான / சந்தைப் பெறுமதிமீதான வரியைச் செலுத்தியுள்ளேன்.

5. வெளிப்படுத்தப்பட்ட வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகையின், வருமானத்தின் அல்லது சொத்தின் தொகை தொடர்பாக,

(அ) எனக்குப் புலனாய்வுகள் அல்லது முடிவுறாத வழக்குகள் எவையுமில்லை அல்லது 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பணம் தூய்தாக்கல் தடைச் சட்டத்தின், 2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல்மீதான சமவாயச் சட்டத்தின், (26 ஆம் அத்தியாயமான) இலஞ்சச் சட்டத்தின் அல்லது 2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, போதையூட்டும் அவுடதங்களினதும் உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தங்களினதும் சட்டமுரணான சமவாயங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழான தவறொன்றுக்கு எனக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருக்கவில்லை; அல்லது

(ஆ) 2021 ஆம் ஆண்டின் ...................... ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் அட்டவணை I இல் அல்லது அட்டவணை IV இல் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் சட்டத்தின்கீழான வரி மதிப்பீடெதுவும் செய்யப்பட்டிருக்கவில்லை.

இதன்கண் என்னால் கொடுக்கப்பட்ட மேலேயுள்ள விபரங்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரை உண்மையானவையும் சரியானவையும் எனப் பயபக்தியாகவும் நேர்மையாகவும் நான் வெளிப்படுத்துகின்றேன்.

தேதி: ......................

..........................................
வெளிப்படுத்துநரின் கையொப்பம்

**குறிப்பு** : இப்படிவத்தில் இடம் போதாதிருக்குமிடத்து, தனிவேறான ஒரு தாள் வெளிப்படுத்துநரினால் பயன்படுத்தப்பட்டுக் கையொப்பமிடப்படலாம்.

(இவ்வெளிப்படுத்துகையானது 2021, திசெம்பர் 31 ஆந்தேதியன்று அல்லது அதற்குமுன்னர் உண்ணாட்டரசிறை ஆணையாளருக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்)

## பாகம் II

(பிரிவு 5)

**தன்னிச்சையான வெளிப்படுத்துகைமீதான வரி**

2021 ஆம் ஆண்டின் ...................... ஆம் இலக்க, நிதிச் சட்டம்

5 ஆம் பிரிவின்கீழான வெளிப்படுத்துகை

ஓர் உருவகத்தினால் (*கம்பெனி, பங்காண்மை, நிதியம், சங்கம், அரசசார்பற்ற ஒழுங்கமைப்புகள் முதலியவற்றினால்) கொடுத்துதவப்படுதல் வேண்டும்.

வரிசெலுத்துநரின் அடையாளங்காண் இல. ........................

உருவகத்தின் வகை ......................

உருவகத்தின் பதிவு இல. ......................

1. .................... என்னுமிடத்தைச் சேர்ந்தவரும் (முகவரி).................. ஆம் இலக்கத் தேசிய அடையாள அட்டையை வைத்திருப்பவருமான திரு./ திருமதி./ செல்வி/ ........................ (முழுப்பெயர்) ஆகிய நான், ........................இன் (உருவகத்தின் பெயர்) ........................ஆக (பதவிப்பெயர்) இருப்பதனால், 2021 ஆம் ஆண்டின் ........................ ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் I இன் நியதிகளின்படி மேலேயுள்ள ........................ இன் (உருவகத்தின் வகை) வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகையின், வருமானத்தின் அல்லது சொத்தின் தொகை தொடர்பில் வெளிப்படுத்துகையொன்றைச் செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஆளாகவுள்ளேன்.

2 ........................ இனால் (உருவகத்தின் பெயர்) இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் 2020, மாச்சு 31 ஆந் தேதியன்றுள்ளவாறு வைத்திருக்கப்பட்ட பின்வரும் வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகையை, வருமானத்தை அல்லது சொத்தை இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

| தொடர் இல. | வரிவிதிக்கப்படற் பாலதான வழங்குகையின், வருமானத்தின் அல்லது சொத்தின் வகை | வரிவிதிக்கப்படற் பாலதான வழங்குகை, வருமானம் அல்லது சொத்து வைத்திருக்கப் பட்ட இடம்/ உருவகம்/ முதலீடு செய்யப் பட்ட வங்கி | அளவு/ கணக்கு இல. | தொகை/ சந்தைப் பெறுமதி |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | மொத்தத் தொகை /சந்தைப் பெறுமதி | | | |

3. மேலே வெளிப்படுத்தப்பட்டவாறான பணம் பின்வருமாறாகவுள்ளது -

(i) பின்வருவனவற்றின்மீது முதலீடு செய்யப்பட்டவை -

(அ) ........................ அன்று (தேதி) ........................ ரூபாத்தொகையினவான ........................ இன் (கம்பெனியின் பெயர்)........................ (அளவு) பங்குகள் / தனிசுப் பிணைப்பொறுப்புக்கள்மீது.

(ஆ) ....................... அன்று (தேதி) ....................... இலங்கை ரூபாக்களில் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்கள் /திறைசேரி முறிகள்மீது.

(இ) ....................... அன்று (தேதி) ....................... இலங்கை ரூபாக்களில் இலங்கையிலுள்ள ....................... மீது (காணி, கட்டிடம், மோட்டார் வாகனம், தங்கம் முதலியன போன்ற அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் - குறித்துரைக்கவும்).

(ii) ....................... அன்று (தேதி) ....................... வங்கியின் ....................... கிளையில் .......................ஆம் இலக்கத்தைக் கொண்ட எனது ....................... கணக்கில் வைப்பிலிடப்பட்டவை.

4. உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதியின் கணக்குக்கு ....................... ஆம் இலக்கக் குறிப்பீட்டிலக்கத்தின் கீழ் ....................... அன்று (கொடுப்பனவுத்தேதி) .......................ரூபாத் தொகையை *....................... இன் சார்பில் 4 ஆம் பிரிவின் நியதிகளின்படி 1% வீதத்தில், 2 ஆம் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட கூட்டுமொத்தத் தொகைமீதான / சந்தைப் பெறுமதிமீதான வரியைச் செலுத்தியுள்ளேன்.

5. வெளிப்படுத்தப்பட்ட வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகையின், வருமானத்தின் அல்லது சொத்தின் தொகை தொடர்பாக,

(அ) ....................... என்பதற்குப் புலனாய்வுகள் அல்லது முடிவுறாத வழக்குகள் எவையுமில்லை (கம்பெனி, பங்காண்மைகள், நிதியம், சங்கம், அரசசார்பற்ற ஒழுங்கமைப்புகள் முதலியவற்றின் பெயர்) அல்லது 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பணம் தூய்தாக்கல் தடைச் சட்டத்தின், 2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல்மீதான சமவாயச் சட்டத்தின், (26 ஆம் அத்தியாயமான) இலஞ்சச்சட்டத்தின் அல்லது 2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, போதையூட்டும் அவுடதங்களினதும் உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தங்களினதும் சட்டமுரணான வியாபாரத்துக்கெதிரான சமவாயங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழான தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருக்கவில்லை; அல்லது

(ஆ) 2021 ஆம் ஆண்டின் ......................... ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் அட்டவணை I இல் அல்லது அட்டவணை IV இல் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் சட்டத்தின்கீழான வரி மதிப்பீடெதுவும் செய்யப்பட்டிருக்கவில்லை

........................ என்ற தன்மையில் (பதவிப்பெயர்) ..................... இன் சார்பில் (உருவகத்தின் பெயர்) இதன்கண் என்னால் கொடுக்கப்பட்ட மேலேயுள்ள விபரங்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரை உண்மையானவையும் சரியானவையும் எனப் பயபக்தியாகவும் நேர்மையாகவும் நான் வெளிப்படுத்துகின்றேன்.

தேதி:

.........................

........................................

தவிசாளரின்/முகாமைப் பணிப்பாளரின்/பங்காளரின் / தலைவரின் கையொப்பம்

**குறிப்** : இப்படிவத்தில் இடம் போதாதிருக்குமிடத்து, தனிவேறான ஒரு தாள் வெளிப்படுத்துநரினால் பயன்படுத்தப்பட்டுக் கையொப்பமிடப்படலாம்.

(இவ்வெளிப்படுத்துகையானது 2021, திசெம்பர் 31 ஆந் தேதியன்று அல்லது அதற்குமுன்னர் உண்ணாட்டரசிறை ஆணையாளருக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்)